
ශ්‍රී ලංකා නීති ආධාර කොමිෂන් සභාව
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
Legal Aid Commission of Sri Lanka

# சிறுவர்களின் உரிமைகள்



USAID நிறுவனத்தின் CORE Justice நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியினால் உருவாக்கப்பட்டது

USAID
FROM THE AMERICAN PEOPLE

USAID
FROM THE AMERICAN PEOPLE


**பொறுப்புத் துறப்பு**

"இவ்வெளியீடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (USAID) ஊடாக அமெரிக்க மக்கள் வழங்கிய ஆதரவின் மூலம் சாத்தியமான விடயமாக அமைந்துள்ளது. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் USAID அமைப்பின் அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நோக்குகளை பிரதிபலிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை".

Ministry of Justice

# சிறுவர்களின் உரிமைகள்

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

பங்களிப்பு வழங்கியவர்
சட்ட அதிகாரி சஜீவனி அபேகோன், LLB, LLM
இயக்குனர் (சட்ட)
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

*copyrights@ Legal Aid Commission of Sri Lanka*



# தவிசாளரின் செய்தி

சட்ட உதவி ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நியதிச் சட்ட அமைப்பான சட்ட உதவி ஆணைக்குழு தகுதிவாய்ந்த சட்டத்தரணிகளின் அணி ஒன்றின் ஊடாக சலுகைகளற்ற சமுதாயத்துக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. எமது ஆணைக்குழுவினால் மனித உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், பெண்களின் உரிமைகள், முதியோர் உரிமைகள், குடும்பச் சட்டம், தொழிலாளர் சட்டம் உள்ளடங்கலாக பல விடயங்களில் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது. எம்மால் முடிந்தளவு அதிகமான குடியியல் சட்ட விவகாரங்களில் நிவாரணம் எமது உதவிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கில் நாம் விழிப்புணர்வூட்டல் மற்றும் வழிகாட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம்.

உரிமை மீறல்கள் தொடர்பில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் ஈடுபாடுகளைக் கொண்டுள்ள போதும் இலங்கை அரசாங்கத்தின் நியதிச் சட்ட அமைப்பொன்றாக சட்ட உதவி ஆணைக்குழு மாத்திரமே சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் மிக்க சட்ட வலு மிக்க அமைப்பாகத் திகழ்கின்றது.

சட்ட உதவி ஆணைக்குழு மக்களின் வருமானம், சமூக நிலை, இனம், தேசியம், மதம், பால்நிலை அல்லது வயது போன்ற விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் சட்ட உதவிக்கு உரித்தான புறக்கணிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தனி நபர்கள் நீதிக்கான சமமான அணுகலைப் பெற்றுக்கொள்ள உதவியமை தொடர்பில் நாம் பெருமை கொண்டவர்களாக உள்ளோம்.

சமூகங்கள், அதிகாரிகள் மற்றும் தனிநபர்கள் போன்றோர் சட்டத்தைப் புரிந்து கொள்ளவும், தமது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அறிந்தவர்களாக இருப்பதற்கும் அத்துடன் சட்ட உதவி ஆணைக்குழுவின் கடப்பாடு கொண்ட சட்டத்தரணிகளின் ஊடாக அவர்கள் உதவிகளைப் பெற முடியும் என்பதை அறிவதற்கும் இக் கைநூல்களின் வரிசை உதவுவதோடு அவை சமூகங்களை மேலும் வலுப்படுத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**றொஹான் சஹபந்து**

- ஜனாதிபதி சட்டத்தரணி

தவிசாளர், சட்ட உதவி ஆணைக்குழு

## இலங்கை
# சட்ட உதவி ஆணைக்குழு

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சட்ட உதவி ஆணைக்குழு (LAC) உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு சமூக நிலை, தமது பால்நிலையின் தன்மை, சாதி, வயது அல்லது ஏனைய வரன்முறை காரணமாக நீதிக்கான அணுகல் தடைப்பட்டதாக அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படும் பாதிப்புறும் ஏதுநிலை மிக்க மற்றும் தேவைகள் கொண்ட சமூகங்கள் அத்துடன் தனி நபர்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

சட்ட உதவி ஆணைக்குழுவானது அதன் ஸ்திரத்தன்மை மற்றும் பேண்தகு நிலை காரணமாக ஏனைய சட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் முதன்மையான நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் 9 மாகாணங்களிலும் தனது 84 நிலையங்கள் ஊடாக நிலைத்து நிற்கும் சட்ட உதவி ஆணைக்குழு அனைவருக்கும் எவ்வித முற்கற்பிதங்களும் இன்றி கல்வி வழங்குதல், விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் சட்ட உதவி வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வருகின்றது. இவ்வாணைக்குழுவில் 120 நிரந்தர சட்ட உத்தியோகத்தர்கள் உள்ளதுடன் பிராந்திய நீதிமன்றங்களில் இருந்து பணிபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளின் உதவியுடன் ஆணைக்குழு இயங்கி வருகின்றது.

உரித்துடைய அனைத்து இலங்கையர்களும் நீதிக்கான சம அணுகலைப் பெறக் கூடிய சமூகம் ஒன்றை உருவாக்குவதே ஆணைக்குழுவின் தொலை நோக்காக அமைந்துள்ளது.

இந்நோக்கத்தை எட்டும் இலட்சியத்துடன் சட்ட உதவி ஆணைக்குழு பல கருத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆணைக்குழுவின் சட்டம் நாட்டிலுள்ள "உரித்துடைய நபர்கள்" அனைவருக்கும் சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உதவி வழங்க வேண்டும் என்று பணித்துள்ளது.

# எமது தொலைநோக்கு

**நீதிக்கான சம அணுகல்**

அனைத்து உரித்துடைய இலங்கையர்களும் அவர்களின் பொருளாதார அல்லது சமூக நிலை, பால்நிலை, சாதி, சமய நம்பிக்கை, அல்லது தேசியம் அல்லது மாற்றுத்திறன் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படாமல் நீதிக்கான சம அணுகலைப் பெறும் சமூகம் ஒன்றை உருவாக்குதல்.

# உள்ளடக்கம்


| | பக்க இல |
|---|---|
| சிறுவர் என்பவர் யார்? | 01 |
| சிறுவர்களுக்கு ஏன் பாதுகாப்பு தேவை? | 02 |
| சிறுவர்களுக்கான பாதுகாப்பினை வழங்கும் சட்டங்கள் யாவை? | 03 |
| சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேசச் சட்டம் | 04 |
| சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான தேசிய சட்டங்கள் | 06 |
| சிறுவர்கள் மீதான அடிப்படை உரிமைகள் சட்டத்தின் பயன்பாடு | 07 |
| அடிப்படை உரிமைச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டம் | 08 |
| மொழி உரிமை மற்றும் சிறுவர் உரிமை | 09 |
| பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையை கைவிடுதல் மற்றும் நிர்க்கதியாக்கல் | 11 |
| பாலியல் துஷ்பிரயோகம் | 13 |
| சட்ட விரோதமான பாலியல் துஷ்பிரயோகம் | 15 |
| நபர்களுக்கிடையிலான மிக மோசமான செயற்பாடு | 16 |
| சிறுவர் தொடர்பாக வெளியிடப்படும் ஆபாசமான அல்லது இழிவான காட்சிப்படுத்தல்கள் | 17 |
| சிறுவர்கள் தொடர்பான சட்டங்களில் உள்ள விசேட ஏற்பாடுகள் | 23 |
| சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிலையங்கள் | 25 |
| LAC நிலையங்களின் பட்டியல் | 30 |



## சிறுவர் என்பவர் யார்?

> "18 வயதிற்கு உட்பட்ட அனைத்து மனிதர்களும் சிறுவர்களாக கருதப்படுகிறார்கள்."

உலகின் சகல பிள்ளைகளினது உரிமைகளையும் உள்ளடக்கியவாறான ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்கள் உரிமைகள் தெளிவான வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளது. அந்த வகையில் 18 வயதிற்குட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடங்குவர். எவ்வாறாயினும் எமது நாட்டில் சிறுவர்களை சட்டத்தின் மூலம் வரைவிலக்கணப்படுத்த குறிப்பான வயதெல்லையொன்று கூறப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 2 மற்றும் 8 என்பன 18 வயதிற்குட்பட்டவர்களை சிறுவர் என கூறுகிறது.

1841 ஆண்டின் 4 ஆம் இலக்க வீதியோரச் சிறுவர்கள் (தெருவில் சுற்றி திரிபவர்கள்) தொடர்பான கட்டளைச் சட்டம் 18 வயதிற்கு குறைந்த பெண் பிள்ளைகளை சிறுவர் என குறிப்பிடுகிறது.

2001 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க சர்வதேச ரீதியில் பிள்ளைகளை கடத்தி செல்பவர் தொடர்பான குடியியல் விடயங்களுக்கான சமவாயச் சட்டம் சிறுவர் என்போர் 18 வயதிற்குட்பட்டவர்களாவர் எனப்படுகிறது.

1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் நபர்கள் தொடர்பான கட்டளைச் சட்டமானது 14 வயதிற்குட்பட்டோரை சிறுவர் என்றும் 14-16 வயதுக்குள் அடங்குவோரை இளம் நபர்கள் என்றும் அறிமுகப்படுத்துகின்றது.

1995 ஆம் ஆண்டின் 33 ஆம் ஆண்டின் சிறுவர் சட்டம் 14-18 வயதுக்குட்பட்ட நபர்களை இளைஞர்களாகவும் 14 வயதிற்குட்--பட்டவர்களை சிறுவர்களாகவும் அறிமுகப்படுத்துகிறது.

## சிறுவர்களுக்கு ஏன் பாதுகாப்பு தேவை?

சிறுவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக முழுமையான வளர்ச்சியை அடைந்தவர்களல்ல என்பது மருத்துவ அறிவியலின் கருத்தாகும். அந்த வகையில் அவர்களை இலகுவான முறையில் வழிதவறச் செய்ய முடியும் என்பதால் அவர்கள் தொடர்பாக விசேட பாதுகாப்பு மற்றும் விசேட கவனிப்பு வழங்க வேண்டும் என்று சிறுவர் உரிமைகள் சமவாயம் மற்றும் இலங்கை அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுவர்கள் எவ்வாறு சுரண்டல் மற்றும் தவறாக பயன்படுத்தப்படுகிறார்கள்?

**துஷ்பிரயோகம்**

வேறு தரப்பினரால் சிறுவர்களை சட்டபூர்வமற்ற செயல்களுக்காக ஈடுபடுத்தல்.

**துர்நடத்தை**

சிறுவர்களாலேயே செய்யப்படுகின்ற சட்டபூர்வமற்ற செயல்கள்

நடைமுறையில் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தைகள் போன்றவைகளால் சிறுவர்களின் உரிமைகள் வெளிப்படையாகவே மீறப்படுகின்றன.

உலகமயமாக்கல் செயல்முறை சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான பல மார்க்கங்களைத் திறந்தது. சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பது சட்டத்தின் அடிப்படை பொறுப்பு ஆகும். இது சம்பந்தமாக, அனைத்து மக்களுக்கும் சட்டம் தொடர்பான அம்சங்கள் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும், மேலும் தற்போதுள்ள சட்டங்களை செயல்படுத்த உதவுவது பொது மக்களின் சட்டபூர்வமான பொறுப்பாகும்.



# சிறுவர்களுக்கான பாதுகாப்பினை வழங்கும் சட்டங்கள் யாவை?

**சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் 18 ஆவது உறுப்புரை**

“பிள்ளையின் வளர்ப்பு மற்றும் வளர்ச்சிக்கு இரு பெற்றோருக்கும் பொதுவான பொறுப்புகள் உள்ளன என்ற கொள்கையை அங்கீகரிப்பதை உறுதி செய்ய திறத்தவர்கள் தங்கள் சிறந்த முயற்சியை பயன்படுத்தும். பெற்றோர்களுக்கும் சட்டரீதியான பாதுகாவலர்களுக்கும் பிள்ளை வளர்ப்பு மற்றும் வளர்ச்சிக்கான முதன்மை பொறுப்பு உள்ளது” என்பதை இப்பிரகடனம் கூறுகின்றது.

**அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை 12 (4)**

அரசியலமைப்பு உறுப்புரையின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பின் பிரிவு 12 (4) இன் படி, பெண்கள், பிள்ளைகள் அல்லது மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சிறப்புச் சட்டங்களை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

# சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேசச்சட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பின் மூலம் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி சிறுவர்களது உரிமைகள் தொடர்பான சமவாயம் அங்கீகரிக்கப்பட்டதன் காரணம் அதுவரைக்கும் காணப்பட்ட சிறுவர் உரிமை தொடர்பான அனைத்து பிரகடனம் மற்றும் சமவாயங்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காகும். 18 வயதை அடைந்த அனைத்துச் சிறுவர்களினதும் உரிமைகளையும் சிறுவர் உரிமைப் பிரகடனமானது உள்வாங்கியதன் காரணமாக, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மிக முக்கியாமான ஆவணமாக அது திகழ்கின்றது. இப்பிரகடனத்தின் மூலம் 4 வகையான வழிகளில் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

**1. வாழ்வதற்கான உரிமைகள்**

சிறுவர் உரிமைப் பிரகடனத்தின் மூலம் சிறுவர்களுக்கு வாழ்வதற்கான உரிமையுள்ளது என்பதுடன் அரசினால் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் பொறுப்புடமையாகும். சுகாதார சேவைகள், உணவு, தூய நீரைப் பெற்றுக் கொடுத்தல். வசிப்பிட வசதி உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்களவு வாழ்க்கைத் தராதரங்களை சிறுவர்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியதுடன், சிறுவரின் வாழ்க்கை தொடர்பான உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாகும்.

**2. அபிவிருத்தி தொடர்பான உரிமை**

சிறுவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கும் ஓய்வு மற்றும் பொழுது போக்குவதற்கும் காலாச்சாரச் செயற்பாடுளில் ஈடுபடுவதற்கும் உரிமை உண்டு என்பது அபிவிருத்தி தொடர்பான உரிமையில் உள்ளடங்கும்.

**3. பாதுகாப்பு தொடர்பான உரிமை**

உலகிலுள்ள பல்வேறு விதமான சிறுவர்களில் அதாவது வலது குறைந்த பிள்ளைகள், அநாதைகள், அகதிகள், வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற சிறுவர்கள் தொடர்பான சகலவிதமான வழிகளிலும் அவர்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் செயல் இடம்பெறுமாயின் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு.

**4. சமூகளிப்பதற்கான உரிமை**

அனைத்துச் சிறுவர்களுக்கும் தமது கருத்தை வெளியிடுவதற்கான சுதந்திரம் உண்டு. மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், சிந்தித்தல், மனசாட்சியை பின்பற்றுவதற்கான சுதந்திரம் உண்டு.

சிறுவர்களை படையணியில் சேர்த்துக் கொள்வது தொடர்பான மேலதிக பின்னிணைப்பு 2000 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டது.

இலங்கையானது 1991 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் திகதி சிறுவர் உரிமைச் சமவாயத்தில் கைச்சாத்திட்டு அதனை ஏற்றுக் கொண்டுள்ளதால் உள்நாட்டுச் சட்ட அமுலாக்கத்தின் போது இச்சமவாயத்தைப் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும்.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்ட (திருத்தக்) கோவை உள்ளடங்கலாக ஏனைய பல சட்டங்களையும் திருத்துவதன் மூலம் சிறுவர் சட்டத்தில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தி இதுவரை காலமாகக் காணப்படாத புதிய கருத்தேற்புக்களை உள்ளடக்கி அரசியலமைப்புச் சட்டம் மூலம் சிறுவர் உரிமைச் சட்டப்பரப்பை மேலும் விரிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைப் பிரகடனத்தை எமது நாட்டில் அமுல்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான தேசிய சட்டங்கள்

அனைத்து நபர்களும் கட்டுப்பட வேண்டிய அடிப்படையானதும் மீயுயர்ந்ததுமான சட்டம் அரசியலமைப்புச் சட்டமாகும். அதன் 12 (4) ஆம் உறுப்புரைக்கிணங்க சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்பட முடியும்.

அவ்வாறே நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான சட்ட அமுலாக்கத்தின் போது ஜனாதிபதி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அரச வழிகாட்டல் கோட்பாடுகளின் ஆறாவது அத்தியாயத்தின் 27 (13) ஆம் உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது.

> “சிறுவர்களினதும் இளம் நபர்களினதும் உடல், உள, ஒழுக்க, மத, சமூக வளர்ச்சிகளை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும், ஓரங்கட்டப்படுவதிலிருந்தும், அவர்களைப் பாதுகாக்கவும் அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படு--த்தல் வேண்டும்.”



## சிறுவர்கள் மீதான அடிப்படை உரிமைகள் சட்டத்தின் பயன்பாடு

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் பதினான்கு அடிப்படை உரிமை உறுப்புரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை அத்தியாயத்தின் மூலம் ஆட்சித்துறை அல்லது நிர்வாகத் துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி உயர்நீதிமன்றத்திற்கு மனுவொன்றை முன்வைப்பதன் மூலம் அந்த அடிப்படை உரிமை மீறப்படுவதை தடுக்கவோ அல்லது அடிப்படை உரிமை மீறப்பட்டதால் ஏற்பட்ட இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளவோ முடியும். அதற்கிணங்க இலங்கையின் மீயுயர் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தையும் மற்றும் சிறுவர் உரிமை பிரகடனத்தில் உள்ள உரிமைகள் தொடர்பாகவும் ஒப்பிட்டு நோக்குவது சிறந்ததாகும்.

பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து உறுப்புரைகளிலும் குறிப்பிடத்தக்கவை மாத்திரமே அடிப்படை உரிமைச் சட்டத்தின் மூலம் சட்டரீதியாக அமுல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் வேறுபாடு காட்டப்படாதிருக்கும் உரிமைகள் காணப்படுகிறது. அவ்வாறான சட்ட உரிமை மீறப்பட்டால் எவ்வாறு தடுப்பது அல்லது மீறப்பட்ட நிலையில் ஏற்பாடாகும் சட்ட ஏற்பாடுகள் என்ன? என்பன பற்றி பிரகடனத்தில் விபரிக்கப்படவில்லை.

அதாவது சிறுவர் உரிமைப் பிரகடனமானது, ஒழுக்கம் சார்ந்த உடன்பாடொன்றாக மாத்திரம் காணப்படுவது இதற்குக் காரணமாகும். ஆனால் அடிப்படை உரிமைச் சட்டம் அவ்வாறானதல்ல.

ஏதேனும் அடிப்படை உரிமை ஒன்று மீறப்படும் பட்சத்தில் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் சிறுவர்கள் உரிமைப் பிரகடனத்தின் பல உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைச் சட்டத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

## அடிப்படை உரிமைச் சட்டம் மற்றும் மனித உரிமைச் சட்டம்

| சிறுவர் உரிமைப் பிரகடனத்திற்கிணங்க சிறுவர் உரிமைகள் | சிறுவர் உரிமைப் பிரகடனத்திற்கு ஏற்றாவாறான அடிப்படை சட்டத்தில் உள்ள உறுப்புரைகள் |
|---|---|
| **2 ஆம் உறுப்புரை**<br>வேறுபாடுகளுக்கும் மாற்றங்களுக்கும் உட்படாதிருத்தல் | **12 (2) உறுப்புரை**<br>சமத்துவத்தின் உரிமை |
| **12 மற்றும் 13 ஆம் உறுப்புரை**<br>கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் | **14 (9) உறுப்புரை**<br>மொழியுரிமை மற்றும் சுதந்திரமான வகையில் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை |
| **14 ஆம் உறுப்புரை**<br>சிந்திக்கும் சுதந்திரம் மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மதசுதந்திரம் | **10 ஆம் உறுப்புரை**<br>சிந்திக்கும் சுதந்திரம் மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மதசுதந்திரம் |
| **15 ஆம் உறுப்புரை**<br>நபர்களுடன் ஒன்று சேரும் சுதந்திரம் | **14 ஆம் உறுப்புரை**<br>ஒன்று கூடும் சுதந்திரம் |
| **37 ஆம் உறுப்புரை**<br>சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமான--மற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது | **11 ஆம் உறுப்புரை**<br>சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான சுதந்திரம் |

# மொழி உரிமை மற்றும் சிறுவர் உரிமை

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமையாக மொழி உரிமை விளங்குகின்றது. இங்கு தேசிய மொழி. நிர்வாக மொழி, நீதிமன்ற மொழி போன்றவைகளையும் கல்வி கற்பதற்கான மொழி என்பன தொடர்பான சட்டரீதியான நடவடிக்கை முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 13வது, 16வது திருத்தங்களின் மூலம் மேற்கூறப்பட்ட நடவடிக்கையானது பல தடவைகள் திருத்தத்திற்குள்ளாகியது.

அதற்கிணங்க

சிங்களம், தமிழ் – அரசகரும மொழி

சிங்களம், தமிழ் – தேசிய மொழி

சிங்களம், தமிழ் – நிர்வாக மொழி

சிங்களம், தமிழ் – நீதிமன்ற மொழி

சிங்களம், தமிழ் – சட்ட அமுலாக்க மொழி

ஆங்கிலம் – தொடர்பு மொழி

அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை அல்லது நிர்வாகத் துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ள சந்தர்ப்பங்களில் பெறப்பட முடியுமான நிவாரணங்கள் மொழியுரிமை மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ள சந்தர்ப்பங்களுக்கும் ஏற்பானதாகும்.

### 1. அரசியலமைப்புச் சட்டத்தின் 21 (1) ஆம் உறுப்புரைக்கிணங்க

எந்தவொரு சிறுவருக்கும் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வியைக் கற்பதற்கான உரிமையுண்டு.

21 (2) ஆம் உறுப்புரைக்கிணங்க,

ஏதேனும் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறி தொடர்பாக கற்பிக்கப்படும் மொழியாக ஒரு தேசிய மொழி இருக்கின்றவிடத்து, அப்பல்கலைக்கழகத்திற்கு இணைவதற்கு முன்னர் மற்றத் தேசிய மொழி மூலம் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர்.

இலங்கையில் சிறுவர் தொடர்பான எல்லா வழக்குகளையும் இரு அரசகரும மொழிகளில் தாக்கல் செய்யலாம். அதற்கிணங்க சிறுவர் தொடர்பான வழக்கு அறிக்கை. வழக்கு நடவடிக்கை என்பன இரு அரசமொழிகளின் மூலம் இடம் பெறவேண்டும்.

## 2. துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தையிலிருந்து பாதுகாக்கும் உரிமை

நடைமுறைச் சமூகத்தில் சிறுவர் எந்தவொரு இடத்திலும் துஷ்பிரயோகங்களுக்கும் துர்நடத்தைகளுக்கும் உட்பட வாய்ப்புண்டு. தொடர்பு சாதனங்கள் மற்றும் கணனி யுகத்தின் முன்னேற்றத்தினால் ஏற்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் குற்றங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அது தொடர்பாக சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தண்டனைச் சட்டக்கோவையில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புடமை பரந்தளவில் காணப்படுகின்றது.

1833 ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டவிதித் தொகுப்பின் மூலம் முதன்முதலாக சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் அசம்பாவிதங்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. தண்டனைச் சட்டக்கோவை பல தடவைகள் திருத்தத்திற்கு உள்ளாக்குவதன் மூலம் காலத்திற்கேற்றவாறு சட்ட ஏற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக மூலோபாயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முக்கியமான திருத்தமாக 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினைக் குறிப்பிடலாம்.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவையில் (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குற்றங்கள் பின்வருவன ஆகும்.

- சிறுவர்களை ஆபாசமான வெளியீடுகளில் ஈடுபடுத்தல்.
- சிறுவர்களைக் கொடூரமாக நடாத்துதல்.
- சிறுவர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குதல்.
- பாலியல் தொடர்புகளுக்காக சிறுவர்களை தயார்படுத்தல்.
- ஒழுக்கக்கேடான பாலியல் ஆதாயத்திற்காக சிறுவர்ளை சுரண்டுதல்.
- சிறுவர்களுடன் ஒழுக்கக்கேடான பாலியல் உறவு.

சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான குற்றங்கள் தொடர்பாக அதிகூடிய மற்றும் அதிகுறைந்த தண்டனை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பலவிதமான வழிகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

## பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையை கைவிடுதல் மற்றும் நிர்க்கதியாக்கல்

பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றின் தந்தை அல்லது தாய் அல்லது அப்பிள்ளையைக் கவனிக்கும் பாதுகாவலராக இருந்து கொண்டு அத்தகைய பிள்ளையை முற்றாக நீங்கும் கருத்துடன் ஏதேனும் இடத்தில் அப்பிள்ளையை விட்டு நீங்கும் அல்லது விட்டுவிடுகின்ற எவரும் ஏழு ஆண்டுகாலங்கள் சிறைத் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறைப் புரிந்தவர் ஆவார்.

### பிரிவு 308 அ (1) சிறுவர்களை கொடுமைப்படுத்தல் மற்றும் துன்புறுத்தல்

பதினெட்டு வயதிற்குட்பட்ட எவரேனும் தனது கட்டுப்பாட்டில், பொறுப்பில் அல்லது பராமரிப்பில் வைத்திருக்கும் ஒரு நபர் அவ்வாறான பிள்ளையின் உடலுக்கு வேதனைகளை ஏற்படுத்தும், சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும், உளவியல் சீர்குலைவுகளைச் செய்யும் செயல்களைச் செய்தல், சிறுவரைக் கவனியாதுவிடல், அல்லது விட்டுவிடல் போன்றவைகள் ஏற்பட வழிவகை செய்தலானது சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல் எனும் குற்றவியல் குற்றங்களைப் புரிந்தவராவர்.

அவ்வாறான குற்றத்திற்கு குற்றவாளியாகும் ஒரு நபர் இரண்டு வருடங்களுக்கு குறையாததும் பத்து வருடங்களுக்கு மேற்படாததுமான இருவகையிலான ஒருவகை சிறைத்தண்டணை மற்றும் தண்டப்பணத்திற்கு உட்படுவதுடன் பிள்ளைக்கு ஏற்பட்ட தீங்கு தொடர்பாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையை செலுத்துமாறும் கட்டளையிடப்படலாம்.

இங்கு சிறுவரின் கட்டுப்பாடு, பொறுப்பு, அல்லது பராமரிப்பு என்பவைகளுக்குப் பொறுப்பான நபர்களாக வீடு, பாடசாலை, சிறுவர் இல்லங்கள் அல்லது சிறுவரின் சட்ட ரீதியான பாதுகாவலர் போன்றவர்கள் அடங்குவர். மாறாக சிறுவர் வேலை வழங்குனர் ஒருவரால் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்தப்பட்டால் அவ்வேலை வழங்குனரே சிறுவரின் பாதுகாவலர் ஆவார்.

இங்கு தீங்கு என்பது உளவியல் அல்லது உளவியல் ரீதியான அதிர்ச்சிகளும் உள்ளடங்கும் என்று 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பிரிவு 358 - அடிமைப்படுத்தல் சிறுவர்களை வேலைக்கமர்த்தல்

எவரேனும் ஒருவரை கடனாளியாக்குவதற்கு அல்லது அடிமைப்படுத்துவதற்கு அல்லது பலாத்காரமாக அல்லது கட்டாயமாக வேலை செய்வதற்கு உட்படுத்தல், அடிமைத்தனத்திற்கு உட்படுத்தல், யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்--காக சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளல்.

1) எவராவது ஒருவரை கடனாளியாக்குவதற்கு அல்லது அடிமைப்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு ஆயத்தம் செய்கின்ற,
2) எவராவது ஒருவரை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தல் அல்லது அவ்வாறு ஆயத்தம் செய்கின்ற,
3) ஆயுத மோதலில் எவராவது சிறுவர் ஒருவரை ஈடுபடுத்தல்,
4) அல்லது சேர்த்துக் கொள்கின்ற நபர் இவ்வுறுப்புரையின் கீழ் குற்றவாளியாவார் என்பதுடன், 30 வருடங்களுக்கு மேற்படாத வகையில் இரு வகையில் ஒரு வகை சிறைத் தண்டனை அல்லது தண்டப்பணத்துடன் தண்டிக்கப்படுவர்.

## பிரிவு 360 அ (2) - சட்டவிரோத இடம்பெயர்வு குடியேற்றம்

இலங்கைக்கு வெளியே உள்ள எந்தவொரு நபருடனும் சட்டவிரோதமாக உறவு கொள்ளும் நோக்கில் அல்லது பதினாறு வயதிற்கு குறைந்த பெண் பிள்ளையின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி இலங்கையிலிருந்து வெளியேற்றல் அல்லது அதற்கான உடந்தைகளைச் செய்தல்.

எந்தவொரு வயதினரும், எந்தவொரு நபரும், இலங்கையை விட்டு வெளியேற (அத்தகைய நபரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி) அத்தகைய நபர் வேறு ஒரு விபச்சார விடுதியின் கைதியாகவோ அல்லது இலங்கையிலிருந்தோ வெளியேறல் அல்லது அதற்கான உடந்தைகளைச் செய்தல்.

பாலியல் உறவினை நோக்கமாகக் கொண்டு 16 வயதிற்குட்பட்ட வரை ஏற்பாடு செய்து கொடுத்தலானது கூட்டிக்கொடுத்தல் எனும் தவறுக்கு குற்றவாளியாவதுடன் 10 வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணத்திற்கு ஆளாவார்.

பணம் அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக பிள்ளையை விலைக்கு வாங்குகின்ற அல்லது விற்கின்ற அல்லது எவரேனும் ஆளின் சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அது தொடர்பாக வசதியளிக்கும், அத்துடன் பலாத்காரமாக அல்லது கட்டாயப்படுத்தி வேலைவாங்கல், அடிமைத்தனத்திற்குள்ளாக்கல், உடலுறுப்புக்களை அப்புறப்படுத்தல், விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தல், அல்லது வேறுவகையில் முறையற்ற பாலியல் பிரயோசனத்தை அடைவதற்காக பணம் அல்லது வேறு ஏதேனும் கைமாற்றத்தினை வழங்கி ஒருவரை விலைக்கு வாங்கல், அல்லது விற்றல் போன்ற காரணங்கள் தொடர்பாக எவரேனும் ஆளின் சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அது தொடர்பாக வசதியளிக்கும் வியாபாரத் தொழிலைச் செய்பவர் “கூட்டிக் கொடுத்தல்” குற்றத்திற்கான குற்றவாளியாவார்.

சிறுவர் தொடர்பாக மேற்கூறப்பட்ட குற்றத்தை செய்துள்ளவிடத்து, அந்நபருக்கு மூன்று வருடங்களுக்கு குறையாததும் மற்றும் இருபது வருடங்களுக்கு மேற்படாததுமான காலங்கள் சிறைத்தண்டனை மூலமாக தண்டிக்கப்படுவதுடன், தண்டப்பணத்திற்கும் ஆளாக்கப்படுவார்.

அவ்வாறு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவது தொடர்பாக

1) 16 வயதிற்குட்பட்ட அல்லது
2) 16 வயதிற்குட்பட்டவர் என்று நம்புமிடத்து

இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எந்தவொரு முறையிலாவது சுவீகாரத்தில் வைக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது அதற்காக வசதியளிக்கும் நபர் அது தொடர்பாக குற்றவாளியாவார் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் இரு வகையிலான ஒரு வகை சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணத்துடன் அல்லது இரண்டுக்கும் ஆளாவார்.

## பாலியல் துஷ்பிரயோகம்

### 1) நியதிச்சட்ட கற்பழிப்பு - பிரிவு 363

இந்த திருத்தத்தின் மூலம் 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணுடன் உறவு கொள்வது நியதிச்சட்ட கற்பழிப்பு என்று பொருள் கொள்ளலாம். அவள் பதினாறு வயதிற்கு உட்பட்டிருக்கும் போது அவளது சம்மதத்துடன் அல்லது சம்மதம் இல்லாமல், பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்டு அந்தப் பெண் அவனது மனைவியாக இல்லாமலும் கணவனுடன் சட்ட ரீதியாகப் பிரியாதவளும்.

பாலியல் பலாத்காரம் செய்த எவருக்கும் ஏழு வருடங்களுக்கும் குறையாத மற்றும் இருபது வருடங்களுக்கு கூடாமல் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்படும், மேலும் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டை செலுத்த உத்தரவிடப்படும்.

இருப்பினும், பின்வரும் சூழ்நிலைகளில், கற்பழிப்புக்கான தண்டனை அதிகரிக்கப்படு--கிறது.

1) அரச அதிகாரி அல்லது அவ்வாறான பதவியை வகிக்கும் வேறொரு நபர் தமது அதிகாரத்தைச் செல்வாக்காகப் பயன்படுத்திக் கொண்டு கற்பழித்தால்;
2) ஏதாவது பாதுகாப்பு இல்லத்தில் அல்லது சிறுவர் இல்லத்தின் முகாமைத்துவ நிலையில் பதவியை வகிப்பவர் அல்லது அதன் காரியாலயத்தின் சேவையாளர் தமது அதிகாரத்தைச் செல்வாக்காக பயன்படுத்திக் கொண்டு கற்பழிப்பொன்றைச் செய்தால்;
3) வைத்தியசாலையின் முகாமையாளர் அல்லது சேவையாளர் தமது அதிகாரத்தை அனுகூலமாக பயன்படுத்திக்கொண்டு ஒரு பெண்ணைக் கற்பழித்தால்;
4) 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளைக் கற்பழித்தால்;
5) உடல் ரீதியாக அல்லது உள ரீதியாக பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கற்பழித்தால்;
6) கூட்டமாகச் சேர்ந்து ஒரு பெண்ணைக் கற்பழித்தால்;

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்நபருக்கு 10 வருடத்திற்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான காலங்கள் கடூழியச் சிறைத்தண்டனையுடன் வழங்கப்பட வேண்டியதுடன் தண்டப்பணத்துக்கும் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையை செலுத்துவதற்கும் ஆளாவார்.

## a) தண்டனைச் சட்டக்கோவையின் 305 (ஆ) பிரிவு

### பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்

கற்பழிப்பாக அமையாத செயலொன்றான ஏதேனும் செயலொன்றைப் புரிகின்ற நபர் ஒவ்வொருவரும் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்தைப் புரிந்தவராவார். இது ஆண், பெண் இருபாலாருக்கு எதிராகவும் இடம்பெற முடியுமான குற்றவியல் குற்றமாகும்.

மற்றைய தரப்பினரின் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ பலாத்காராமான முறையில் அச்சுறுத்தல் செய்தல் அல்லது காயமேற்படுத்தல் அல்லது மரண அச்சுறுத்தல் ஏற்படுத்தியதன் பின்னர் பாலியல் அவாவினைப் பெற்றுக் கொள்வதற்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் ஏதேனும் பாகத்தை அல்லது வேறேதேனும் சாதனத்தை ஆளின் உடம்பில் ஏதாவது ஒரு பகுதியை பயன்படுத்துதல் முதலியவை கடூழிய பாலியல் துஷ்பிரயோகம் ஆகும்.

இது தொடர்பான தண்டனையாக 7 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான கடூழியச் சிறைத்தண்டனையுடன் கூடிய தண்டப்பணம் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட தீங்கு தொடர்பாக நட்ட ஈடு தீர்மானிக்கப்படும்.

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகக் குற்றம் 18 வயதிற்குட்பட்டவரால் 16 வயதிற்குட்பட்ட பெண்ணுக்கு எதிராக இடம்பெற்றிருந்தால் நீதிமன்றத்திற்கு 10 வருடங்களுக்கு குறைந்த சிறைத்தண்டனையை வழங்க முடியும். குற்றவாளி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் சிறுமி 16 வயதிற்குட்பட்டவராகவும் காணப்படுமிடத்து பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் சிறைத்தண்டனை வழங்கப்படும்.

## சட்ட விரோதமான பாலியல் துஷ்பிரயோகம்

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு, பாலியல் செயற்பாடுகளிற்கு அல்லது பாலியல் ரீதியான ஆபாசமான இழிவான கண்காட்சியில் சிறுவரை பங்குபற்றச் செய்வதற்கு தெரிந்து கொண்டே வசதிகளை ஏற்படுத்துக் கொடுத்தல். அல்லது பாலியல் உறவின் நோக்கங்களுக்கு அல்லது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு சிறுவர்களை கூட்டி வருதல், அல்லது அச்சுப் பிரதி அல்லது வாய் மொழி மூலம் உறவில் அல்லது துர்நடத்தையில் ஈடுபடுத்துதல். தூண்டுதல் அல்லது சிறுவருடன் தமக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி எவரேனும் நபரின் சுவீகாரத்தில் வைத்தல் அல்லது சிறுவனின் பெற்றோருக்கு பணம் அல்லது வேறேதேனும் கைமாற்றத்தைப் பெற்றுக் கொடுப்பதினூடாக சிறுவரைப் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளல் மூலம் முறையற்ற வகையில் பாலியல் துஷ்பிரயோகத்தினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற குற்றங்களிற்கு ஆளாவார்.

> “இக்குற்றத்திற்கு தண்டனையாக 5 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனை அல்லது தண்டப்-பணத்தின் மூலம் தண்டிக்கப்படலாம்.”

### b) முறையற்ற புணர்ச்சி

முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவினர்கள் மற்றும் மகவேற்கப்பட்டவர்கள் போன்றவர்களுடன் பாலியல் புணர்ச்சிகளில் ஈடுபடுதலே முறையற்ற புணர்ச்சி எனும் குற்றமாகும். பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள் முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவினர் சமூகத்தின் ஒழுக்க விழுமியங்களுக்கு முரணான வகையில் தீங்குகளை ஏற்படுத்தும் முறைகளில் புணர்தல் மூலம் முறையற்ற புணர்ச்சி இடம்பெறுமாயின் அக்குற்றத்தைப் புரிந்தவருக்கு 7 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படலாம்.

## நபர்களுக்கிடையிலான மிக மோசமான செயற்பாடு

ஒரே பால் அல்லது வேறுபட்ட பாலியல் தொடர்புகளுக்காக சிறுவர்களை ஈடுபடுத்திக் கொள்ளல் குற்றவியல் குற்றமாகும் என்று தண்டனைச் சட்டக்கோவையின் 365 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரிவு 365 (ஆ)**

பகிரங்கமாக அல்லது பகிரங்கமற்ற முறையில் அல்லது வேறு ஒரு தரப்பினருடன் மிக மோசமான செயற்பாடொன்று இடம்பெறாது விடினும் அச்செயற்பாட்டிற்கு தரப்பினராதல் அல்லது அவ்வாறான ஒரு செயற்பாடு ஒருவரால் மேற்கொள்ளப்படல் போன்ற குற்றங்களிற்கு கூட்டிக்கொடுத்தல் அல்லது கூட்டிக்கொடுத்தலுக்காக உடந்தையாயிருக்கின்ற எந்தவொரு நபரும் இக்குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

இவ்வாறு குற்றவாளியான ஒருவர் இருவகையிலான ஒருவகையில் சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது அவை இரண்டின் மூலமும் தண்டிக்கப்படலாம். இக்குற்றம் 18 வயதுக்கு மேற்பட்டவரால் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எதிராக இடம்பெற்றுள்ளவிடத்து 10 வருடங்களுக்கு குறையாததும் 20 வயதிற்கு மேற்படாத்துமான காலங்கள் கடூழிய சிறைத்தண்டனையுடன் தண்டப்பணம் மற்றும் பாதிக்கப்பட்டவர் தொடர்பாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தொகையை செலுத்துவதற்கும் ஆளாவார்.



# சிறுவர் தொடர்பாக வெளியிடப்படும் ஆபாசமான அல்லது இழிவான காட்சிப்படுத்தல்கள்

**பிரிவு 286 (அ)**

இது 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் குற்றவியல் குற்றமாகும். இச்சட்டத்தின் திருத்தத்திற்கிணங்க 286 (ஆ) பிரிவை சுருக்கமான முறையில் அவதானிக்கலாம்.

ஏதேனும் ஆபாசமான புத்தகம், ஆவணம், பத்திரம், ஓவியம், சித்திரம், புகைப்படம், படமொன்றில் நடிக்கச் செய்தல் போன்றவைகளுக்கான தோற்ற நிலையை அமைவிப்பதற்கு உருநிலைப்படிவம் கொள்ளுவதற்கென வாடகைக்கு கொடுக்கின்ற, விற்கின்ற அல்லது உடமையில் வைத்திருக்கின்ற பிள்ளையொன்றின் பெற்றோராக பாதுகாவலராக அல்லது அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ஆளொருவராக இருக்கையில் மேற்கூறப்பட்ட ஏதேனும் ஆபாசமான அல்லது இழிவான காட்சிப்படுத்தலில் பங்குபற்ற அதற்கு தோற்ற நிலையை அமைவிக்க வழிவகை செய்துகொடுத்தவராயின் அவ்வாறான நபர் அல்லது அவ்வாறான புகைப்படத்தை வெளியிடுகின்ற அல்லது விளம்பரச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் நபர் மேற்கூறப்பட்ட குற்றத்தை செய்பவராகின்றார்.

அவ்வாறான குற்றத்தை செய்த நபர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாததும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகையில் சிறைத்தண்டனையால் மற்றும் தண்டப்பணத்தால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையின் (திருத்தச்) சட்டத்தின் மூலம் 286 ஆம் பிரிவு 286 (ஆ) மற்றும் 286 (ஈ) போன்ற இரு பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

286 (ஆ) சிறுவருக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக கணனி மூலம் சேவைகளை வழங்கும் ஆளொருவர் அக்குற்றம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். அவ்வாறே ஒரு நபர் அக்குற்றத்தை புரிவது அறியப்படுமிடத்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அது தொடர்பாக அறிவிக்க வேண்டும். கணனி மூலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பான குற்றத்திற்கு ஆளாகிய குற்றம் சாட்டப்பட்டவர் இரு வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் இருவகையிலான ஒரு வகையில் சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் செய்வதற்காக இடமளிக்கும் அவ்விடத்துக்குப் பொறுப்பாக இருக்கின்ற அல்லது அவ்விடத்துக்குப் பாதுகாப்பை வழங்கும், அதனை நிர்வகிக்கும் அல்லது உடமையுடையவருக்கு எதிராக எவரேனும் ஆளுக்கு அறியக்கிடைக்கும் இடத்து அது தொடர்பாக அந்நபர் பொலிஸிற்கு அறிவிக்க வேண்டும். அவ் அறிவித்தலை அவர் அறிவிக்காவிடின் அதனைச் செய்யாமைக்கான குற்றத்துக்கு குற்றவாளியாவதுடன் இரு வருடங்களுக்கு மேற்படாத காலங்கள் இருவகையிலான ஒரு வகையில் தண்டனைக்குரிய குற்றவாளியாவார்.

பிரிவு 288 (1)

பிச்சையெடுப்பதற்கு வழிவகை செய்தல் அல்லது அதற்காக தரகர் வேலை பார்த்தல் கூட்டிக் குடுத்தல்.

**இச்சட்டத்தின் மூலம் பிள்ளைகளை இவ்வாறான சேவைகளில் ஈடுபடுத்துகின்ற தரகர்களைப் போன்றே பெற்றோர்களும் ஒரே வகையான தண்டனைக்கு உட்படுவார்கள்.**

பிச்சையெடுத்தல், அல்லது பிச்சை எடுப்பதற்கு தூண்டுதலாகிய கருமங்களுக்காக ஏதாவது ஒரு வீதியில், இடத்தில், அல்லது ஓரிடத்தில் இருப்பதற்கு சிறுவனை ஒழுங்கு செய்யும் அல்லது கூட்டிக்கொடுக்கும் நபர் இது தொடர்பாக குற்றவாளியாவார்.

இவ்வாறான குற்றத்திற்கு குற்றவாளியாகக் காணப்படும் எந்தவொரு நபருக்கும் 5 வருடங்களுக்கு குறையாத காலத்துக்கு இரு விதத்தில் ஒரு விதத்தில் சிறைத்தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கும் குற்றப்பணம் செலுத்துவதற்கும் உட்படுத்தப்படுபவராவார்.

பிரிவு 288 (அ) – பாலியல் உறவுக்காக சிறுவர்களை கூட்டிக்கொடுத்தல் அல்லது தூண்டுதல்.

பிரிவு 288 (அ)(1) – வரையறை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு சிறுவர்களை கூலிக்கு அமர்த்துதல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல்.

ஏதாவது வரையறை செய்யப்பட்ட பொருட்களை வியாபாரம் செய்வதற்கு தெரிந்து கொண்டே சிறுவர் ஒருவரை வாடகைக்கு அமர்த்துதல், சேவையில் ஈடுபடுத்தல், விருப்பத்திற்கு உட்படுத்தல், தூண்டுதல் போன்றவற்றால் அச்சிறுவரைப் பலாத்காரப்படுத்தும் ஒருவர் குற்றவாளியாவார்.

இக்குற்றத்திற்கு 2 வருடத்திற்கு குறையாததும் 5 வருடத்திற்கு கூடாததுமான காலத்திற்கு இருவிதத்தில் ஒரு விதத்திலாவது சிறைத்தண்டனையைப் பெறுவதற்கு உள்ளாக்கப்படுவதுடன் தண்டப்பணம் செலுத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுவர்.

மேற்கூறப்பட்ட சகல குற்றங்களும் தண்டனைச் சட்டக்கோவையில் உள்ள குற்றவியல் குற்றங்கள் என்பதுடன் இப்பிரிவின் கீழ் சிறுவர் என்பவர் 18 வயதிற்கு குறைந்த நபர் ஒருவரையும் குறிக்கும்.

இப்போது நாம் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஏனைய சட்ட ஏற்பாடுகளை ஆராய்வோம்.

## 3) 1999 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நீதிமன்ற நடவடிக்கை

16 வயதிற்கு குறைந்த கற்பழிக்கப்பட்ட சிறுமி ஒருத்தியை நீதவான் நீதிமன்றத்தில் சுருக்கமுறையற்ற விசாரணையை நடத்தாது நேரடியாகவே மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
சிறுவர்கள் நீதிமன்றத்தில் இரு தடவை அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதே இவ் ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.

## 4) 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைக் கோவை (திருத்தச்) சட்டம்

இச்சட்டத்தின் மூலம் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை 3 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்திருக்கலாம். இதன் நோக்கம் அத்தகைய துஷ்பிரயோகச் செயல் தொடர்பாக எந்தவொரு தாமதம் மற்றும் தடையெதுவும் அற்ற வகையில் விசாரணையை முடிவு செய்து பிள்ளையின் பாதுகாப்பை ஒழுங்குபடுத்துவதாகும்.

5) 1989 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க விபச்சார விடுதிகள் சட்டம்

இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் விபச்சார விடுதிகளை நடாத்திச் செல்வது குற்றமாகும். இதன் விளைவாக பிள்ளைகளை விபச்சார தொழிலுக்கு ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

6) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள் மற்றும் இளம் நபர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கான சட்டம்

இக்கட்டளைச் சட்டத்திற்கிணங்க சிறுவர் என்பது 14 வயதுக்குட்பட்டவராகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு சிறுவர் வேலையாளிக்கு வேலை செய்வதற்கான மணித்தியாலங்கள் மற்றும் ஓய்வு நேரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

**1**

முற்பகல் 6 மணியிலிருந்து இரவு 8 மணிவரை வேலைகளில் ஈடுபட்டிருப்பின் 10 மணித்தியாலங்கள் ஓய்வு வழங்கப்பட வேண்டும்.

**2**

இரவு 8 மணியிலிருந்து 6 மணிவரை வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் 10 மணித்தியாலங்கள் ஓய்வு வழங்கப்பட வேண்டும்.

**3**

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சிறுவர் தொழிலாளிக்கு 7 நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறே பிள்ளையைச் சேவையில் ஈடுபடுத்த முடியாத காலங்களாக பின்வரும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

- பாடசாலை நேரத்தில்
- பி.ப 8 மணியிலிருந்து முற்பகல் 8 வரை
- பாடசாலை செல்ல வேண்டிய தினத்தில் 2 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட மணித்தியாலங்கள்
- எந்தவொரு ஞாயிற்றுக்கிழமையிலும் 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலங்கள்
- சிறுவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பாரதூரமான வேலையாயின்
- வாழ்க்கைக்கு, சுகாதாரத்திற்கு, கல்விக்கு அல்லது உடல் ரீதியாக தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபடுத்தல்
- சிறுவர்களை வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு அல்லது ஏனைய தொழில்களுக்கு ஈடுபடுத்தல்

அவ்வாறே சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு பிள்ளைக்கு பாடசாலை செல்வதற்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற தொழில் தொடர்பாக அப்பிள்ளையை வேலையில் ஈடுபடுத்தல் தடுக்கப்பட்டுள்ளதோடு 12 வயதிற்கு குறைந்த பிள்ளையை வேலையில் ஈடுபடுத்த முடியாது. எனினும் தோட்ட வேலை தொடர்பாக குறைந்த வயதெல்லை 14 ஆகும்.

சட்டத்தில் மேலும் விபரிக்கப்படுவதாவது பிள்ளையை வேலையில் ஈடுபடுத்துவது தடுக்கப்பட்டதாயின் தமது குடும்பத்தின் வியாபாரத்தில் ஈடுபடுத்துவது மேற்கூறப்பட்ட நிலைமைக்கு விதிவிலக்காகும்.

அவ்வாறே இச்சட்டத்தின் மூலம் 18 வயதிற்கு குறைவான நபர்கள் எனின் பிறந்த தினம், வேலை செய்யும் மணித்தியாலங்களை உள்ளடக்கிய பதிவு ஒன்றை நடாத்திச் செல்வது வேலை வழங்குநரின் பொறுப்பாகும்.

## 7) 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை காரியாலயங்கள் சட்டம்

இச்சட்டத்தின் மூலம் அரசியலமைப்புச்சட்டத்தின் 12 ஆவது உறுப்புரை ஓரளவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையின் மூலம் அரசியலமைப்புச்சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கிணங்க பெண்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக விசேடமான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 14 வயதுக்கு குறைந்தவர்களை கடைகாரியாலயங்களில் வேலைக்கு ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆண்பிள்ளையாயின் 18 வயதைப் பூர்த்தி செய்யாதவிடத்தும் மற்றும் எந்தவொரு பெண் பிள்ளையை முற்பகல் 6 மணிக்கு முன்பும் மற்றும் பிற்பகல் 6 மணிக்கு பின்பும் கடைகாரியாலயங்களில் வேலையில் ஈடுபடுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

## 8) 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்

இச்சட்டமானது பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பில் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளது. 25 வயது வரை தன்னால் தங்களைப் பராமரிக்க முடியாத வயதினையுடைய பிள்ளைகள், வயது எல்லைகளின்றி வலது குறைந்த பிள்ளைகள், 18 வயது வரை ஒவ்வொரு பிள்ளைகளும் அவர்களின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் பராமரிக்கப்பட வேண்டும்.

## 9) 1944 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதியோரச் சிறுவர்களுக்கான கட்டளைச் சட்டம்

சிறுமி ஒருவர் அவளது பெற்றோர் அல்லது பாதுகாவலரால் தெரிந்து கொண்டே விபச்சார வாழ்க்கையை நடத்தினால் அல்லது அவர்களால் ஏமாற்றப்பட்டு அல்லது பாலியல் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அக்குற்றத்திற்கு குற்றவாளியாவார். இவ்வாறான குற்றம் தொடர்பான முறைப்பாடொன்றை கிராமசேவகருக்கு நீதவான் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யலாம்.

## 10) 1945 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்

இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு பெண்கள் மற்றும் இளம் நபர்கள் பின்வரும் நிலைமைகளின் கீழ் வேலைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு கிழமைக்கு 48 மணித்தியாலங்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். வேலை மணித்தியாலங்கள் ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு மேற்படக்கூடாது. முற்பகல் 6 மணிக்கு முன்பாக ஆரம்பிக்ககூடாது என்பதுடன் பிற்பகல் 6 மணிக்கு பின்பும் ஈடுபடுத்தப்படவும் கூடாது. எனினும் 16 வயதினைப் பூர்த்தி செய்யாத இளம் ஆட்கள் நான்கரை மணித்தியாலங்களுக்கு மேற்பட்டவாறு தொடர்ந்து வேலை செய்தால் குறைந்தபட்சம் அரை மணித்தியாலங்களேனும் ஓய்வு எடுப்பதற்காக அல்லது உணவு உண்பதற்காக வழங்கப்பட வேண்டும். மாறாக ஓய்வு நேரத்தை வழங்காது தொடர்ந்து வேலையில் ஈடுபடுத்தக்கூடாது.

வழமைக்கு மாறாக விதிக்கப்பட்ட நேரத்துக்கு மேலதிகமாக சேவையில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் பெண்கள் மற்றும் இளம் நபர்கள் குறிப்பிட்ட மேலதிகச் சேவைக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு சிறுவர் எனப்படுவோர் 14 வயதிற்கு குறைந்த ஆள் என்பதுடன் இளம் நபர்கள் எனப்படுவோர் 14 வயதிற்கும் 18 வயதிற்கும் குறைந்த நபர்கள் என்று கருதப்படுவர்.

## 11) 1995 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க வீட்டு வன்முறைச் சட்டம்

வீட்டு வன்முறைகள் ஏற்படும் இடங்களாக குடும்பம் அல்லது வீட்டுச்சூழல் என்று இச்சட்டத்தினால் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. எந்தவொரு இடத்திலும் வன்முறைகளுக்கு உள்ளாகும் ஒவ்வொரு ஆட்களுக்கும் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் 2 (2) உப பிரிவிற்கிணங்க பாதிக்கப்பட்ட நபர் சிறுவராயின் அச்சிறுவருக்காக பின்வரும் நபர்களால் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- அவனின் பெற்றோரில் ஒருவரால் அல்லது அச்சிறுவரின் பாதுகாவலரால்
- பிள்ளை வசிக்கும் இடத்தில் வசிக்கின்ற ஆளொருவரால்

1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சிறுவர்களைப் பாதுகாப்பதர்கான தேசிய அதிகாரசபைச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய அதிகாரசபையின் மூலம் எழுத்து மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட நபரால் குறிப்பிட்ட நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்ய வேண்டும். இதன் விசேடத்துவம் யாதெனில் வன்முறைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்று நியாயமாக கருதப்படும் வேளையிலும் நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும்.

## 12) சிறுவர் மற்றும் இளம் பராயத்தவர் தொடர்பான கட்டளைச் சட்டம்

சிறுவர் மற்றும் இளம் பராயத்தவர்களால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான சட்டங்கள் இச்சட்டத்தில் ஆறு பகுதிகளைக் கொண்டு விபரிக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போது இச்சட்டத்தின் 1,2,3,6 போன்ற பகுதிகள் மாத்திரமே அமுலில் இருக்கின்றன. மேலும் ஐந்தாவது பகுதியின் 6.7 ஆவது பிரிவுகளும் அமுலில் உள்ளன.

**முதாலாவது பகுதி:** சிறுவர் நீதி மன்றங்களை நிறுவுதல் மற்றும் அதன் தொழிற்பாடுகளும் கடமைகளும்.

இச்சட்டத்தின் கீழ் பதினான்கு வயதிற்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் என்றும் 14 – 16 வயதினை உடையவர்களை இளம்பராயத்தவர் என்றும் அறிமுகப்படுத்துகிறது. சிறுவர் மற்றும் இளம்பராயத்தவருக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவர்களின் அதி உயர்ந்தபட்ச நலன் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது இதன் அடிப்படை நோக்கமாகும்.

**இரண்டாவது பகுதி:** இங்கு சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர்களால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் போது நீதிமன்றத்திற்கு ஏற்பாகும் விசேட நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

**மூன்றாவது பகுதி:** குற்றவாளியாகின்ற சிறுவர் மற்றும் இளம்-பராயத்தவர்களின் பாதுகாப்பு தொடர்பான தங்கும் இல்லங்கள், அனுமதி பெற்ற பாடசாலைகள் மற்றும் சான்றிதழ் பெற்ற பாடசாலைகள் தொடர்பான நடவடிக்கைகள்.

இதன் கீழ் தங்கும் இல்லங்கள், அனுமதிபெற்ற பாடசாலை, அநாதை இல்லங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களை தாபிப்பது தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டம்.

பிரிவு – 31

21 வயதிற்குட்பட்ட நபர்கள் தொடர்பாக புகையிலை மற்றும் மதுபானம் போன்றவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் விநியோகிப்பதற்காக முன்வருதல் என்பவைகளைச் செய்யக் கூடாது.

76 ஆவது பிரிவின் மூலம் 16 வயதிற்குட்பட்ட சிறுவருக்கு புகையிலை மற்றும் அப்புகையிலை பயன்படுத்தப்படும் ஏனைய உற்பத்திகள் மற்றும் சிகரெட் போன்றவைகளை விற்பனை செய்வது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.

2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சமவாயச் சட்டம்.

இச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் மூலம் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

1. சகல சிறுவர்களுக்கும் அவனது அல்லது அவளது பிறப்பை பதிவு செய்வதற்கும், பிறப்பிலிருந்து பெயர் ஒன்றைக் கொண்டிருப்பதற்கும் உரித்துடையவர்.
2. நாட்டுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உண்டு.
3. சிறுவர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சட்ட உதவியற்றதன் காரணமாக அநீதி இடம்பெற முடியுமான சந்தர்ப்பங்களில் அதனைக் கருத்திற் கொண்டு அரச செலவில் அரசால் வழங்கப்படும் சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதர்கு உரிமை உண்டு.

**உறுப்புரை 4 (2)**

“ சிறுவர்களுடன் தொடர்பான விடயங்கள் அரச அல்லது தனியார் துறை செயற்படுகின்ற சமூக நலன்புரி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், நிர்வாக அலுவலகர்கள் அல்லது அரசியலமைப்புச் சபை போன்றவைகளால் பொறுப்பேற்கும் போது அவ்வனைத்து விடயங்களிலும் சிறுவர்களின் அதியுயர்ந்த நலனுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## சிறுவர்கள் தொடர்பான சட்டங்களில் உள்ள விசேட ஏற்பாடுகள்

தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆவது பிரிவுக்கு ஏற்றவாறு 16 வயதிற்குட்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது.

தண்டனைச் சட்டக்கோவையின் 75 ஆவது பிரிவில் குறிப்பிடப்படுவது 08 வயதுக்கு குறைந்த பிள்ளையொன்றினால் செய்யப்படும் எதுவும் குற்றமாகாது.

1. தண்டனைச் சட்டக்கோவையின் 76 ஆவது பிரிவு குறிப்பிடுவது,

   "8 வயதிற்கு மேற்பட்டதும் 12 வயதிற்குட்பட்டதுமான சிறுவர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தனது நடத்தையின் தன்மையையும், விளைவினையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு போதிய முதிர்ச்சியடையாததுமான சிறுவரொருவரால் செய்யப்படும் எதுவும் தவறாகாது."

2. பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பான சட்டத்தின் மூலம் சிறுவர்களின் வழக்கு நடவடிக்கைகளுக்காக வேறான நீதிமன்றம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. பராயமடையாதவரால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தமானது குறிப்பிட்ட பருவ வயதை அடைந்த பின்னர் அதனை மீண்டும் ஏற்றுகொண்டதன் பின்னரே செல்லுபடியாகும்.

4. சகல பிள்ளைகளும் 14 வயது வரை கட்டாயமாக கல்வியைப் பெற வேண்டும்.

5. சிறுவர்களின் சொத்து தொடர்பில் அப்பிள்ளை 18 வயதை அடையும் வரை சிறுவர்களுக்கு எதிராக ஆட்சியுரிமை செல்லுபடியாகாது.

6. பிள்ளையின் வழக்கு நடவடிக்கையானது திறந்த நீதிமன்றத்தினுள் இடம்பெற வேண்டும்.

7. பிள்ளை எப்பொழுதும் வயது முதிர்ந்த சிறைக்கைதிகளுடன் தடுத்து வைப்பதற்கு கட்டளை இடப்படக்கூடாது என்பதுடன் அவர்கள் வெவ்வேறாக தடுத்து வைக்கப்படவும் வேண்டும்.

8. சிறுபராய குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனையை வழங்குவதே இறுதியான தண்டனையாக பிரயோகத்தில் வேண்டும்.

## சிறுவரின் அதியுயர்ந்த நலன்

**உறுப்புரை 3 - சிறுவர் உரிமைப் பிரகடனம்**

❝ சிறுவர்கள் தொடர்பான கருமங்களில் தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் அதியுயர்ந்த நலன் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். சிறுவர்கள் தொடர்பான நேரடியான அல்லது மறைமுகமாக ஏற்படும் எல்லா விதமான செயற்பாடுகளிலும் அவர்களது அதியுயர் நலன் கவனத்திற் கொள்ளப்பட்ட வகையில் தீர்மானங்களை எடுப்பது அனைத்து நபர்களினதும் கடமையாகும்.

## அதியுயர்ந்த நலனை சட்டக் கருத்தேற்பாக நோக்குமிடத்து

பிள்ளையின் பாதுகாவல், பொறுப்பு, பராமரிப்பு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் பிள்ளையின் அதியுயர்ந்த நலன் எனும் சட்ட ஏற்பாடு கருத்தில் எடுக்கப்படும். பிள்ளையின் அதியுயர்ந்த பாதுகாவலை வழங்கும் மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் பாதுகாவல், பராமரிப்பு தொடர்பாக கூடுதலான வகையில் கருத்தில் கொள்ளப்படும். இந்நீதிமன்றத்தின் மூலம் பிள்ளையின் அதியுயர்ந்த நலன் அதிகூடுதலான வகையில் அமுலாக்கப்படும். அவ்வாறே சிறுவர் குற்றவாளிகள் தொடர்பாக குற்றவியல் செயற்பாடுகளில் சிறுவரின் அதியுயர் நலன் தொடர்பாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு உட்படுத்த வேண்டும்.

## பிள்ளையின் மேலான அதியுயர்ந்த நலன்

பிள்ளையின் உடல் அல்லது உள ரீதியான அபிவிருத்தியின் பொருட்டு பயனளிக்கக் கூடிய உபாயங்களைப் பின்பற்றி சிறுவர்களுக்கான எனும் சூழலை வழங்குவதற்கு இயலுமாயின் இது நீதிமன்றத்தின் மூலம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தீர்மானம் எடுப்பதிலேயே தங்கியுள்ளது.

## பிள்ளையின் மேலான அதியுயர்ந்த நலன் தொடர்பான நடைமுறை நிலைமை

எந்தவொரு பிள்ளைக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் உள்ள சகல உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியுமாயின் அவ்வேளையில் பிள்ளையின் மேலான நலன் கருத்திற் கொள்ளப்படும் என்று அனுமானிக்கலாம். எனினும் நடைமுறையில் அந்நிலமைக்கு மாறான சமூகம் மற்றும் பொருளாதார சூழலில் அமுலில் உள்ள சான்றுகள் நீதிமன்றத்தின் மூலம் கருத்தில் எடுக்கப்பட்டு நிகழ்வாய் அமைந்த காரணிகள் மீது பிள்ளையின் அதியுயர் நலன் கருத்தில் கொள்ளப்பட்ட வகையில் கட்டளையொன்று வழங்கப்படும்.



# சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிலையங்கள்

சிறுவர் உரிமைகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதலாவது நாடாக இலங்கையை அறிமுகப்படுத்தலாம். அதற்குக் காரணம் சிறுவர் உரிமைகளை விருத்தி செய்வதற்காக முதன் முதலாக 1928 ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு சமூகம் எனும் அமைப்பு தாபிக்கப்பட்டதைக் கூறலாம். சமூகத்தில் கௌரவிக்கப்பட வேண்டிய நபர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இதுவரைக்கும் சிறுவர் உரிமைச் சட்டப் பரப்பை விருத்தி செய்து பாரியளவிலான சேவைகளைச் செய்துள்ளது. சிறுவர் நீதிமன்றங்களை உருவாக்குவது இதன் பிரதான குறிக்கோள் என்பதுடன் அண்மைக்காலங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை உருவாக்குவதிலும் முன்னொடியாக இருந்த நிறுவனமாகும்.

- துஷ்பிரயோகம்
- வேறு தரப்பினரால் சிறுவர்களை சட்டபூர்வமற்ற ஒரு செயலுக்காக ஈடுபடுத்தப்படல்.
- துர்நடத்தை
- சிறுவர்களால் செய்யப்படுகின்ற சட்டபூர்வமற்ற செயல்கள்
- மேற்கூறப்பட்ட துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தையைத் தடுப்பதற்கான நிலையங்கள்
- இலங்கை பொலிஸ்

இத்துர்நடத்தைகளை தவிர்க்கின்ற முதலானதும் மற்றும் பிரதானமான நிறுவனம் இதுவாகும். இங்கு தொல்லை அல்லது துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியவர்களுக்காக "சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு" தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் மற்றும் மகளிருக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்படுகளை விசாரணை செய்தல். அவதானிப்புச் செய்தல் இவ்விதமான குற்றங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்றவைகள் இடம்பெறும்.

முகவரி : பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்,
வயிட்வேஸ் கட்டிடம்,
இல. 25, சேர் பாரேன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு – 01.
தொலைபேசி: 011-2444444

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை தொடர்பாக அறிவிக்க வேண்டிய மற்றுமொரு நிறுவனம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையாகும்.

இல: 330, தலவதுகொட வீதி, நுகெகொட.
தொலைபேசி: 011-2778911, 011-2778912, 011-2778915
மின்னஞ்சல்: info@childprotection.gov.lk
அவசர அழைப்பு: 1924

**தொழில் திணைக்களம்**

பராயமற்ற சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தல் பற்றிய செய்திகளை அறிவிக்க வேண்டிய நிறுவனம் தொழில் திணைக்களமாகும். கீழே குறிப்பிட்ட நிலையங்களுக்கு அறிவிக்க முடியும்.

உதவித் தொழில் ஆணையாளர்
மாவட்ட தொழில் அலுவலகர்
சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர்
உபதொழில் அலுவலகர்
தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம்
முகவரி: தொழில் ஆணையாளர்
சிறுவர் மற்றும் மகளிர் நடவடிக்கைப் பிரிவு
தொழில் திணைக்களம்
கொழும்பு – 05
தொலைபேசி: 011-2587315, 011-2369297

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம்**

சிறுவர்களின் பாதுகாப்பு, மறுவாழ்வு தொடர்பாக இந்நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இத்திணைக்களம் தனது சொந்த அதிகாரங்களை மாகாண சபை மட்டத்தில் பண்முகப்படுத்தி மாகாண ரீதியில் காரியாலயங்களை நிறுவியுள்ளது.

இதன் மூலம்

1. திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்ற இளைஞர் மற்றும் சிறு பராயத்து குற்றவாளிகளின் வாழ்க்கையை சீர்செய்து மறு வாழ்வு கொடுத்தல்.
2. பெற்றோருக்கு கீழ்படியாத பாடசாலையிலிருந்து ஓடிச் செல்லும் முரண்டு சமூக விரோத வேலைகளைச் செய்யும் சிறுவர்களை நல்வழிக்கு கொண்டு வருதல்.
3. அநாதையான கைவிடப்பட்ட, உதவியற்ற, கொடூரமான செயல்களுக்கும் அனர்த்தங்களுக்கும் இரையாகிய சிறுவர்களை பாதுகாத்தல்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம்,
இல. 150A, எல்.எச்.பி கட்டிடம்,
நாவல வீதி, நுகெகொட.
தொலைபேசி: 011-2853549

**மனித உரிமைகள் ஆணைக்குழு**

1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அமைப்பாகும். மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன இதன் பிரதான நோக்கமாகும். அதற்கிணங்க பிள்ளைகளின் மனித உரிமைகலைப் பாதுகாப்பதற்கும் அதனை மீறுவது தொடர்பான விசாரணைகளைச் செய்வதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பு பிரதான காரியாலயத்தின் முகவரி
இல. 42, ஸ்கல்டன் வீதி, கொழும்பு – 05.
தொலைபேசி: 011 – 2502703

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

இனம், மதம், சாதி, பால், தேசியம், பிறப்பிடம் எவ்வாறாயினும் சிறுவர்களின் மேலான அக்கறை தொடர்பான நிகழ்வுகளில் ஈடுபடுவது இலங்கை மக்களாகிய எமது எல்லோரினதும் கடமையாகும். அத்துடன் சிறுவர்களின் உரிமைகளை விருத்தி செய்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதும் எமது கடமையே ஆகும். இவ்வாறு சிறுவர்களின் உரிமையை விருத்தி செய்வது தொடர்பாக சட்ட உதவி ஆணைக்குழுவானது பின்வருமாறு செயற்படுகிறது.

1. ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்களின் உரிமை சமவாயத்தின் 42 ஆம் உறுப்புரைக்கு இணங்க அவர்களது உரிமை தொடர்பாக வயது முதிர்ந்தோர் மற்றும் சிறுவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பயனளிக்கக் கூடிய வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் ஏற்படும் பிள்ளைகளுக்கு எதிரான துர்நடத்தைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுத்தல்.
3. சிறுவர்களுக்கு உள ரீதியான சிகிச்சை தேவைப்பட்டால் இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவானது உள ரீதியான மருத்துவ முறை மற்றும் சட்டப்பிரிவினூடாக அவர்களை அச்சிகிச்சையைப் பெறுவதற்காக அனுப்புகின்றது.
4. சிறுவர்களின் நலன்களை மேம்படுத்தும் வழிவகைகள் தொடர்பாக ஆய்வொன்றை நடாத்தல், தற்போது பிள்ளைகளின் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை அரசுக்கு சுட்டிக்காட்டி புதிய சட்ட விடயங்களை மற்றும் அதனை கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளில் அரசுக்கு உதவுதல்.
5. யுனிசெப் நிலையம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸ் போன்றவர்களின் உதவியுடன் சிறுவர்களின் உரிமையை விருத்தி செய்வதற்காக்ச் செயற்படல்.
6. சிறுவர்களின் அதியுயர்ந்த நலன், பாதுகாப்பு மற்றும் பாரமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்கென சிறுவர்களுக்காக மட்டும் வேறொரு நிலையம் பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியில் தாபிக்கப்பட்டுள்ளது. சிறுவர் தொடர்பான எந்தவொரு பிரச்சினையிலும் அது தொடர்பான கவனத்தைச் செலுத்தும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மற்றும் எத்தரப்பினரும் அப்பிணக்குகளை நீதிமன்றத்திற்கு முன் வைக்க முடியும்.


அதன் முகவரி: கௌரவ நீதிபதி
சிறுவர் நீதவான் நீதிமன்றம்
டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை
கொஸ்வத்தை, பத்தரமுல்ல

சிறுவர்கள் தொடர்பான பிணக்குகளில் சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் தாபிக்கப்பட்டுள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் நிலையத்தின் ஊடாக கட்டணம் எதுவும் அறவிடப்படாது அதற்கான தீர்வு மற்றும் சட்டத்தரணிகளின் உதவியும் பெற்றுக் கொடுக்கப்படும்.

சட்ட உதவி ஆணைகுழுவின் பத்தரமுல்ல நிலையம்
சிறுவர் நீதவான் நீதிமன்றம்
டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்தை, பத்தரமுல்ல.

பாடசாலை மட்டத்தில் சட்டப்பிரிவை நிறுவுவதற்கான வழிகாட்டலின் போது நீங்கள் செய்ய வேண்டியது பாடசாலை அதிபரின் அனுமதியுடன் கூடிய கடிதமொன்றை அனுப்பி வைத்தலாகும். அவ்வேளையில் அது தொடர்பான உதவி ஒத்தாசைகள் எம்மால் வழங்கப்படுவதுடன் பல்வேறு வகையில் நிகழ்ச்சித் திட்டங்களும் இடம்பெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்.

முகவரி: இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு
சிறுவர் பிரிவு
பிரதான காரியாலயம்
இல. 129, மேல் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி, புதுக்கடை, கொழும்பு 12.
தொலைபேசி: 011-2433618, 011-5335281
தொலைநகல்: 011-2395894
மின்னஞ்சல்: legalaid@sltnet.lk



## இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் சிறுவர் தொடர்பான அனைத்துச் சட்டங்கள்

1978 ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம்
1833 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை
1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்
1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்
2006 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்
1841 ஆம் ஆண்டின் வீதியோர சிறுவர்களுக்கான (வீதிகளில் அலைந்துத் திரிபவர்கள்) கட்டளைச் சட்டம்
1889ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைக் கோவைச் சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, 1971 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, 1980 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள்
1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சிறைச்சாலை கட்டளை சட்டம்
1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது திருமணக் கட்டளைச் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க (திருத்தச்) சட்டம்
1927 இன் இல. 4 இன் ஆபாசமான வெளியீடுகள் தொடர்பான கட்டளை சட்டம்
1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இளம் பராயத்து தவறாளிகளுக்கான (புனர்வாழ்வு, பாடசாலை) தொடர்பான கட்டளைச் சட்டம்
1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பிள்ளைகள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பான கட்டளைச் சட்டம்
1941 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சிறுவர் இல்லங்கள் கட்டளைச் சட்டம்
1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மகவேற்பு சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க (திருத்தச்) சட்டம்
1942 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம்
1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க தவறாளிகளின் நன்னடத்தை சட்டம்
1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு குடியகல்வுச் சட்டம்
1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம்
1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க திருமணம் மற்றும் விவாகரத்து (கண்டிய) சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க (திருத்தச்) சட்டம்
1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட்டம்
1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்பு சட்டம் மற்றும் 1973 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க திருத்தச் சட்டம், 1984 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம்
1956 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பெண்கள் மற்றும் பிள்ளைகள் இளம் பராயத்தவர்களுக்கு எதிரான (ஆபாசமான வெளியீடுகள்) சட்டம்
1975 ஆம் ஆண்டின் குற்றவியல் நடவடிக்கைக் கோவை மற்றும் 1995 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, 1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க (திருத்தச்) சட்டங்கள்
1979 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தொட்ர்பான கட்டளை
1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்
1999 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நீதி பரிபாலனச் சட்டம்
1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்பு சட்டம்
1999 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சான்றுகள் கட்டளை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்
2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி சட்டம்
2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சட்டம்
2006 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுவதற்கு எதிரான (திருத்தச்) சட்டம்
2007 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயச் சட்டம்

# LAC நிலையங்களின் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 011-2433618 | மன்னார் | 023-2222045 |
| அக்கரைப்பற்று | 067-2279462 | மாரவில | 032-2254443 |
| அம்பாறை | 063-2223495 | மாத்தளை | 066-2224828 |
| அநுராதபுரம் | 025-2224465 | மாத்தறை | 041-2233815 |
| அத்தனகல | 033-2297020 | மத்துகம | 034-2249262 |
| அவிசாவளை | 036-2233857 | மாவனெல்ல | 035-2247272 |
| பத்தேகம | 091-2292051 | மினுவாங்கொடை | 011-2297790 |
| பதுளை | 055-2225759 | மொணராகலை | 055-2276891 |
| பலாங்கொடை | 045-2289099 | கல்கிஸ்ஸை | 011-2718708 |
| பலப்பிட்டிய | 091-2255753 | முல்லைத்தீவு | 021-2290077 |
| பண்டாரவளை | 057-2224733 | மூதூர் | 026-2238777 |
| பத்தரமுல்லை | 011-2877687 | நாவலப்பிட்டி | 054-2224227 |
| மட்டக்களப்பு | 065-2225399 | நீர்கொழும்பு | 031-2281080 |
| சாவகச்சேரி | 021-2270882 | நிக்கவெரட்டிய | 037-2260203 |
| சிலாபம் | 032-2222175 | நுகேகொடை | 011-2809068 |
| தம்புள்ளை | 066-2284551 | நுவரெலியா | 052-2235260 |
| தேயந்தர | 041-2268077 | பாணந்துறை | 038-2244822 |
| தெனியாய | 041-2271128 | பருத்தித் துறை | 021-2260212 |
| எம்பிலிப்பிட்டிய | 047-2230299 | பொல்கஹவெல | 037-2243039 |
| கல்கமுவை | 037-2253290 | பொலன்னறுவை | 027-2226572 |
| காலி | 091-2226124 | பொத்துவில் | 063-2248485 |
| கம்பஹா | 033-2248804 | பூகொடை | 011-2405333 |
| ஹம்பாந்தோட்டை | 047-2221092 | இரத்தினபுரி | 045-2226899 |
| ஹட்டன் | 051-2222390 | தங்காலை | 047-2240122 |
| ஹிங்குராகொடை | 027-2245521 | தம்புத்தேகம | 025-2276259 |
| ஹோமாகம | 011-2748813 | திஸ்ஸமஹாராமை | 047-2239611 |
| ஹொரணை | 034-2265244 | திருகோணமலை | 026-2226328 |
| யாழ்ப்பாணம் | 021-2224545 | வாழைச்சேனை | 065-2258349 |
| கடவத்தை | 011-2922440 | வவுனியா | 024-2221863 |
| கடுவெல | 011-2548150 | வலஸ்முல்ல | 047-2245566 |
| கெக்கிராவை | 025-2263536 | வெல்லவாய | 055-2274466 |
| கல்முனை | 067-2223710 | வறக்காப்பொலை | 037-2277075 |
| களுத்துறை | 034-2222017 | வாரியப்பொல | 037-2268199 |
| கண்டி | 081-2388978 | வெலிமடை | 057-2244860 |
| கந்தளாய் | 026-2234521 | மல்லாகம் | 021-2059170 |
| கெபதிகொல்லாவை | 025-2298101 | புத்தளம் | 032-2266636 |
| கேகாலை | 035-2231790 | சியம்பலாண்டுவை | 055-2279250 |
| கிளிநொச்சி | 021-2285618 | தெஹியத்தகண்டி | 027-2250700 |
| குளியாப்பிட்டி | 037-2284611 | LT-பொரளை | 011-2698003 |
| குருநாகல் | 037-2229641 | கலகெதர | 081-2061025 |
| மஹியங்கணை | 055-2258332 | வத்தளை | 011-2935907 |
| மாஹோ | 037-2275075 | ஹெட்டிபொள | 037-2291915 |

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

இல. 129, உயர் நீதிமன்றத் தொகுதி,
ஹல்ப்ட்ஸ்டார்ப் வீதி, கொழும்பு 12.

011 2433618

legalaidcommission1978@gmail.com

www.legalaid.gov.lk

